கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,

பெரியகுளம்.

<u>அசல் வழக்கு எண்.</u> 100/2019 நாள். 16.03.2026

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி எண்.</u> 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுபாஷினி | ஊர் | : | பூதிப்புரம் |
| கணவர் பெயர் | : | கண்ணன் | தாலுகா | : | தேனி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 51/2026 |

ஆணையுறுதி சட்டப்படி, மொழிப்பெயர்பாளர் செல்வி. சுதாமணி மூலமாக சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 10.02.2003 ஆம் தேதியிட்டு நான் ச.பழனிசாமி என்பவரிடம் கிரையம் வாங்கியதற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.548/2003 பி.வா.சா.ஆ.1

2. 17.02.2003 ஆம் தேதியிட்டு நான் க.பழனிசாமி என்பவரிடம் கிரையம் வாங்கியதற்கான பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.700/2003 பி.வா.சா.ஆ.2

3. 10.07.2010 ஆம் தேதியிட்டு நான் வனிதா வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றதை காட்டக்கூடிய பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.6176/2010 பி.வா.சா.ஆ.3

4. 25.05.2005 ஆம் தேதியிட்டு நான் டி.ஜெகதீசன் என்பவரிடம் கிரையம் பெற்றதை காட்டக்கூடிய பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.2736/2005 பி.வா.சா.ஆ.4

5. 30.12.2011 ஆம் தேதியிட்டு நான் அம்மணி வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றதை காட்டக்கூடிய பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.13339/2011 பி.வா.சா.ஆ.5

6. 09.05.2023 ஆம் தேதியிட்டு நான்SM சுரேஷ் குமார் என்பவருக்கு என் கிரைய பத்திரத்தின் படி பதிவு செய்து கொடுத்த பதிவு குத்தகை பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.4445/2023 பி.வா.சா.ஆ.6

7. 19.08.2025 ஆம் தேதியிட்டு நான் பாண்டியராஜ் என்பவருக்கு என் கிரைய பத்திரத்தின் படி பதிவு செய்து கொடுத்த பதிவு குத்தகை பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.7057/2025 பி.வா.சா.ஆ.7

8. 23.02.2021 ஆம் தேதியிட்டு நான் வங்கியில் கடன் வாங்கி பெற்று கடன் தள்ளுபடி செய்யப்பட்டதை காட்டக்கூடிய சான்றிதழ் அசல் பி.வா.சா.ஆ.8

9. 28.08.2019 ஆம் தேதியிட்டு நான் MD special 30 பூதிப்புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு எழுதி கொடுத்த பதிவு அடமான

கடன் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.6425/2019 பி.வா.சா.ஆ.9

10. என் பெயரில் பல்வேறு தேதிகளில் உரம் வாங்குவதற்காக வாங்கிய கடன் ரசீதுகள் 9 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ.10

11. நான் 24.10.2023, 03.11.2023, 11.11.2023 ஆகிய தேதிகளில் பாக்குமரம் விவசாயம் செய்ய பாக்குமர கன்றுகள் வாங்கிய ரசீதுகள் 3 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ.11

12. நான் தனித்து வெட்டிய தேங்காய்களை பல்வேறு தேதிகளில் லாரியில் எடை போட்ட ரசீதுகள் 15 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ.12

13. நான் பல்வேறு தேதிகளில் என் பெயருக்கு ஓஸ் மற்றும் எலக்ட்ரிக் சாமான்கள் வாங்கி செலவு செய்ததற்கான ரசீதுகள் 11 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ.13

14. நான் JCB வண்டி மூலம் மராமத்துவேலை செய்ததற்கு 11.10.2023, 10.10.2023, 20.09.2023, 23.09.2023 ஆகிய தேதிகளில் வழங்கப்பட்ட ரசீதுகள் 4 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ. 14

15. நான் டயமண்ட் பென்சிங் இன்டஸ்டிரி மூலமாக 22.09.2023, 21.09.2023, 23.09.2023, 03.10.2023 ஆகிய தேதிகளில் முள் கம்பி வேலி அமைத்தற்கு வழங்கப்பட்ட ரசீதுகள் 4 எண்ணம் அசல் பி.வா.சா.ஆ. 15

வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR

Digitally signed by SANKAR
Date: 2026.03.16 18:06:24 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.